[2005 ஏப்ரல் 6

அனுமதி பெற்று நிச்சயமாக பெரியசேமுர் கால்நடை கிளை நிலையத்தை தரம் உயர்த்திக் கொடுக்க அம்மாவினுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

திரு. டி.என். சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல கால்நடை மருத்துவமனைகளிலே மருத்துவர்கள் இல்லாத நிலை இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதற்கு உடனடியாக மருத்துவர்களை நியமிப்பதற்கு ஆவன செய்வார்களா என்று உங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கால்நடை மருந்தகத்தில் அல்லது கிளை நிலையத்தில் மருத்துவர் இல்லை என்று சொல்வார்களேயானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று உடனடியாக அங்கு கால்நடை மருத்துவரை நியமனம் செய்ய அம்மா அவர்கள் உத்தரவிடுவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 309, திரு. சி. இராசேந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

309—

கால்நடை மருத்துவமனை

***41300—திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவோணம் ஒன்றியம், அக்கரை வட்டம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருவோணம் ஒன்றியம், அக்கரை வட்டம் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையமோ அல்லது மருந்தகமோ தற்போது இல்லாத நிலையில்

2005 ஏப்ரல் 6]

அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது வழிவகை இல்லை என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆ) எழாது.

திரு. சி. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவோணம் ஒன்றியம், அக்கரை வட்டம் ஊராட்சியில், அந்த ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் 2,500 மாடுகளுக்குக் குறையாமல் இருக்கின்றன. அந்த ஊராட்சியையொட்டி மூன்று பால் கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கங்கள் இருக்கின்றன. அக்கரை வட்டம் ஊராட்சியில் மட்டும் ஒரு நாளைக்கு 800 லிட்டர் பால் உற்பத்தி செய்கிறார்கள். அதேபோல அதன் அருகில் உள்ள தளிகைவிடுதி ஊராட்சியில் 410 லிட்டர் பால் உற்பத்தி செய்கிறார்கள். அதற்கு அருகில் இருக்கின்ற அம்மங்குடி ஊராட்சியிலும் நாள் ஒன்றுக்கு 200 லிட்டர் பால் உற்பத்தி செய்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயம் வாழ்கின்ற கிராமப் பகுதி உயர வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில் சுய உதவிக் குழுக்களை எல்லாம் ஆரம்பித்து, சுயமாக தொழில் செய்ய வேண்டுமென்ற நிலையில் இன்றையதினம் அந்தப் பகுதியில் இருக்கின்ற ஊராட்சியில் உள்ள அனைவரும் தாங்கள் சொந்தமாகவே கறவை மாடுகளை வாங்கி அங்கே அவற்றை வளர்த்துக் கொண்டு தங்களுடைய குடும்ப வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் இருக்கின்ற அந்த மூன்று ஊராட்சிகளிலும் சுய உதவிக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. மிகவும் பின்தங்கிய அந்தப் பகுதிகளிலிருந்து கால்நடை மருத்துவமனைக்கு செல்ல வேண்டுமென்று சொன்னால் 15 கிலோ மீட்டர் திருவோணத்திற்குச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அதை மனதில் வைத்து அங்கே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் மீண்டும் மறுபரிசீலனை செய்து கிளை மருந்தகத்தைத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதிகப்படியான பால், சுயஉதவிக் குழுக்கள் மூலம் வருகிறது என்றும், ஆகவே, அந்த மூன்று கிராமங்களிலும் கால்நடைக் கிளை மருத்துவ நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுள்ளார்கள். நடப்பு ஆண்டில்

[2005 ஏப்ரல் 6

கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாக உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், கால்நடை மருந்தகங்களைக் கால்நடை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துவது குறித்து, மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப, தகுதியின் அடிப்படையில் திருவோணம் கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாக உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய கால்நடைக் கிளை நிலையங்கள் தொடங்கிட மாநில திட்டக் குழுவால் விதிக்கப்பட்ட தடையுத்தரவு நீக்கப்பட்ட பின்னர், மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப அக்கரை வட்டம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஏற்படுத்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடையுத்தரவு நீக்கப்பட்ட பின்னர், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று செய்து கொடுப்பேன் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருவோணம் ஒன்றியத்தில் இயங்கி வருகின்ற கால்நடை மருந்தகம் 20 ஊராட்சிகளுக்குத் தலைமையிடமாக இருந்து இயங்கி வருகிறது. இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் இன்றையதினம் மருந்தகங்களெல்லாம் தரம் உயர்த்தப்படுகின்றன. அந்த நிலையில், திருவோணம் ஒன்றியத்தில் இயங்கி வருகின்ற கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்தித் தருவார்களா என்பதையும், அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையின்பேரில், இங்கே 5,005 கால்நடை பாதுகாப்பு முகாம்கள் நடத்தப்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பாதுகாப்பு முகாமை, திருவோணம் ஒன்றியத்தில் இருக்கின்ற அக்கரை வட்டம் ஊராட்சியிலும், அதைச் சுற்றியுள்ள ஊராட்சிகளிலும் செயல்படுத்துவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அக்கரை வட்டம் கிராமத்தில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, இந்த ஆண்டில் தரம் உயர்த்திக்

2005 ஏப்ரல் 6]

கொடுக்க ஆவன செய்யப்படும் என்பதையும், திருவோணம் ஒன்றியம், அக்கரை வட்டம் ஊராட்சியில் கடந்த சனவரி மற்றும் மார்ச் மாதங்களில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு, அங்குள்ள கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், தடுப்பூசிப் பணிகள் மற்றும் இதர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புற மக்கள் நலனுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பு நிதியாண்டில் 60 இலட்சம் கால்நடைகள் பயனடையும் வகையில், 5,005 முகாம்கள் நடத்திட, 1 கோடியே 85 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, நடப்பு நிதியாண்டிலும் திருவோணம் ஒன்றியம் அக்கரை வட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடைகள் பயனடையும் வகையில், அங்கு கால்நடைப் பாதுகாப்பு முகாம் நடத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வெ. ஏழுமலை.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, என்னுடைய தொகுதியான செஞ்சியில், தையூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரவர்கள் தொகுதிகளுக்கெல்லாம் தனித்தனியாகக் கேள்வி போடுங்கள்.

வினா எண் 310, திரு. டி. மணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

310—

மீனவர் பயிற்சி நிலையம்

***34899—திரு. டி. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் பகுதியிலுள்ள மீனவர் பயிற்சி நிலையக் கட்டடம் பழுதடைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் சீர் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?